T.C-027

074/DD/24

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SPECIAL LANGUAGE TEST FOR OFFICERS OF THE EDUCATION DEPARTMENT HIGHER STANDARD – FIRST PAPER – TAMIL (TEXT AND TEXTUAL GRAMMAR)

(Without Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

### பகுதி – I

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.** **(6 × 4 = 24)**

1. அவையம்-குறிப்பு வரைக.

2. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

3. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

4. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

5. நான்கனுக்குப் பொருள் தருக :

(அ) யாக்கை

(ஆ) விரிச்சி

(இ) சுண்ணம்

(ஈ) பண்டி

6. நான்கனுக்கு இலக்கணக் குறிப்பு தருக :

(அ) உய்முறை

(ஆ) மூதூர்

(இ) தடக்கை

(ஈ) நன்மொழி

[Turn over

7. பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (அ) | உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக் காக்கப்படும் | 1. | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |
| (ஆ) | ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது | 2. | உயிரினும் ஓம்பப்படும் |
| | | 3. | நடுஊருள் நச்சுமரம் பழுத்தற்று. |

8. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

## பகுதி – II

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.** **(6 × 6 = 36)**

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு காட்டுவன யாவை?
2. 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?
3. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா? எழுதுக.
4. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
5. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
6. "விருந்தினனாக ஒருவன்" - எனத் தொடங்கும் பாடலை அடிமாற்றாமல் எழுதுக.
7. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

## பகுதி – III

**எவையேனும் <u>நான்கு</u> வினாக்களுக்கு விடை தருக.** **(4 × 10 = 40)**

1. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.
2. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.
3. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.
4. ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. இன்றைய நிலையை விளக்குக.
5. கருணையின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.